1986 ஏப்ரல் 25]

விடை—(அ) தற்சமயம் மேற்படி வழித்தடத்தில் பேருந்து களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

குறிப்பு : [ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) பெரம்பலூர் ஒன்றிய அரசு மேல்நிலைப் பள்ளி மாணவன் பள்ளி ஆசிரியர்களால் தண்டிக்கப் பெற்றுள்ளது.

டாக்டர் க. நல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் பெரம்பலூர் தொகுதியில் பெரம்ப லூர் ஒன்றியத்தில் அரசு மேல் நிலைப்பள்ளியில் 11-வது வகுப்பில் படித்து வந்த மணி என்பவருடைய மகன் தமிழ்ச்செல்வன் என்ற மாணவனை பள்ளி தலைமை ஆசிரியரும் மற்ற ஆசிரியர் களும் மூங்கில் தடியாலும் காலணியாலும் தாக்கி, தனி அறையில் பூட்டி வைத்து, அடித்து சித்திரவதை செய்திருக்கிறார்கள். அந்த மாணவன் ஒரு உயர் ஜாதி பெண்ணை காதலித்தான் என்பதற் காக 22—3—86, 23—3—86 மற்றும் 24—3—86 ஆகிய நாட்களில் தனி அறையில் பூட்டி வைத்து சித்திரவதை செய்திருக்கிறார்கள். அதன் காரணமாக பலத்த காயமடைந்த அந்த மாணவன் அவ னுடைய பெற்றோரால் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டு, சிகிச்சை செய்யப்பட்டு, குளுக்கோஸ் எல்லாம் ஏற்றப் பட்டு, இந்த நிலையில் அந்த மாணவன் திடீரென்று இறந்து விட்டான்..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதி கேட்டீர்கள், அனுமதி அளித்து, அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து விட்டீர்கள், இதற்கு மேல் வேண்டாம்.

*திரு. டி.ஆர். வேங்கடரமணன் : தலைவர் அவர்களே அரசாங்கத் தரப்பிலிருந்து அதற்கு பதில் வரவில்லையே; ஒரு அரிசன மாணவன் இறந்திருக்கிறான். அதற்கு என்ன பதில் என்பதைச் சொல்ல வேண்டாமா?

MR SPEAKER: The hon. Member cannot compel me to get an answer. I have given an opportunity to the Member.